## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (5)

# அண்ணா பேச்சு, குற்றால அருவி! கொஞ்சு தமிழ்ச் சிந்து!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

கட்சி நேரிடையாகப் பங்கு கொண்டதால் சுயராஜ்யக் கட்சி மறைந்து ஒழிந்தது. காங்கிரஸ் அமைச்சரவை ராஜாஜி அவர்களை முதல்வராகக் கொண்டு அமைக்கப்பட்டது. ராஜாஜி தமிழக முதல்வரானதும் இந்தியைப் பள்ளிக்கூடங்களில் கட்டாயப் பாடமாக்கினார். "இந்தி கட்டாயம்"என்று சட்டம் வந்தவுடன், அதனை முன்னாலே அறிந்து எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி வந்த தமிழ்ப் பற்றுடையோரும், புலவர் பெருமக்களும் வீறிட்டெழுந்தனர். கிளர்ச்சிகள் நடத்தினர். கட்டாய இந்தி வேண்டாமென்று முடிவுகள் எடுத்து அரசுக்கு அனுப்பினர். செந்தீயென எழும் தங்கள் கண்டனங்களைச் செய்தித்தாள்களின் வாயிலாக வெளியிட்டுக் குவித்தனர். தமிழகத்தின் நகரங்கள், பட்டி தொட்டிகள், சிற்றூர்கள் எங்கணும் இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி! எதிர்ப்புக் கண்ட ராஜாஜி மேலும் வன்மையாக இந்தியைத் திணிக்கத் தொடங்கினார்.

காங்கிரசிலே உள்ள தமிழர்கள் கட்டாய இந்தியை உள்ளூர விரும்பவில்லை. அதற்கு நல்ல எடுத்துக்காட்டாக, நாவலர் சோமசுந்தர பாரதியார், காங்கிரசை விட்டு விலகி இந்தி ஆதிக்க எதிர்ப்புக்குச் சிம்மக் குரல் கொடுக்கத் தொடங்கினார். சட்ட மன்றத்திலே பேசிய ராஜாஜி, "இந்தியை எதிர்ப்பவர்கள் யார்? இரண்டே இரண்டு பேர்தான்! ஒருவர் ராமசாமி நாயக்கர், மற்றொருவர் பசுமலை பாரதியார்" என்றார்.

எதிர் வரிசையில் அமர்ந்திருந்த பன்னீர் செல்வம் உடன் எழுந்து, "எதிர்ப்பவர் இருவர். ஆனால் இந்தியைக் கொண்டு வருபவர் நீங்கள் ஒருவர்தான், ஆகவே, பெரும்பான்மை எதிர்ப்பின் பக்கம்தான்," என்று பதில் கூறினார். அந்தப் பதில் உரைகேட்டுத் தமிழகமே பன்னீர் செல்வத்தைப் பாராட்டி மகிழ்ந்தது.

இந்தி ஆதிக்க எதிர்ப்பில் பல்லாவரத்தார் பழந்தமிழ்ப் பேச்சாளர் பண்பு மிக்க மறைமலையடிகளாரும் குதித்திட்டார். "அந்தோ! வடமொழி வந்து தமிழைப் பெரிதும் வீழச் செய்து விட்டதே! அதைக் குற்றுயிராக்கி விட்டதே ஆங்கிலம்! இனி இந்தி வந்தால் தமிழ் அழிதல் திண்ணமே. அய்யகோ! என் செய்குவோம்" என்று ஏங்கிய மறைமலையடிகளாருக்கு இந்தி ஆதிக்க எதிர்ப்பு இயக்கம் பெரும் ஆறுதலை அளித்தது. 1938ஆம் ஆண்டு, சூன் திங்கள் 3-ஆம் நாள் சைதாப்பேட்டையில் கூடிய இந்தி ஆதிக்க எதிர்ப்பு மாநாட்டிற்கு மறைமலையடிகள் தலைமை தாங்கினார். ஆம்! நான் பிறந்த சூன் திங்கள் 3-ஆம் நாளில், தமிழ் காக்க, இந்தி ஆதிக்க எதிர்ப்பு முதல் போருக்கு மக்களைத் திரட்டியெழுப்பும் மாநாட்டில் மறைமலையடிகளார் தலைமை தாங்கினார் என்பதை எண்ணி எண்ணி மகிழ்கிறேன்.

1938-இல் தொடங்கிய இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போருக்குப் பெரியார் தலைமை தாங்கினார். அறிஞர் அண்ணா, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் மற்றும் புலவர் பெருமக்கள், தமிழ்ச் சான்றோர்கள் இந்தி எதிர்ப்புப் படையில் முன்வரிசையில் அணிவகுத்து நின்றனர். இந்தியைக் கட்டாயமாக வைத்துள்ள பள்ளிகளின் வாயில்களில் மறியல் நடைபெற்று, ஆடவரும் பெண்டிருமாய் ஆயிரம் பேருக்கு மேல் சிறைக் கோட்டம் சென்றனர். தாளமுத்து, நடராசன் என்ற இரு தமிழ் வீரர்கள் இந்தியை எதிர்த்துச் சிறை புகுந்து, சிறைக் கோட்டத்தில் பிணமாயினர். தமிழன், மொழிப் போராட்டத்தின் கொடியை, அந்த வீரர்களின் குருதியிலே தோய்த்து விண்முட்டப் பறக்கவிட்டான்.

1938-இல் தான் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவராக சுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் பண்டித நேரு, ஓய்விற்காக ஐரோப்பா சென்று விட்டார். அந்த ஆண்டு முழுவதும் நேரு இந்தியாவில் இல்லை!

நீதிக் கட்சியின் உதவியோடு சென்னை மாநிலத்தில் முதலமைச்சராக ஆட்சி நடத்திய டாக்டர் சுப்பராயன், 1938-இல் ராஜாஜி மந்திரி சபையில் கல்வி அமைச்சராக இருந்தார். அவரது அறையில்தான் 1938 பிப்ரவரி 25 ஆம் நாள் தமிழ் நாட்டில் இந்தியைக் கட்டாயப் பாடமாக்க வேண்டுமென்ற முடிவு எடுக்கப்பட்டது. அடுத்த இரண்டு நாட்களுக்கெல்லாம் பிப்ரவரி 27-இல் காஞ்சிபுரத்தில் கான்பகதூர் கலிபுல்லா சாகிப், எம்.எல்.ஏ அவர்களால் தமிழகத்தில் இந்தி ஆதிக்க எதிர்ப்பிற்கான கொடி உயர்த்தப்பட்டது. இந்த மாநாட்டில்தான் சோமசுந்தர பாரதியார், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துக் குரல் கொடுத்தார். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் படத்தைப் பெரியார் திறந்து வைத்ததும் இந்த மாநாட்டில்தான். 'பொதுமக்கள் பணத்தைக் கொண்ட சர்க்கார் வரவு செலவுத் திட்டத்தில் அவசியமற்ற இந்தி மொழி ஆதிக்கத்திற்காகப் பணம் செலவழிக்கக் கூடாது' என்று இந்த மாநாட்டில் ஒரு தீர்மானம் கொண்டு வரப்பட்டது. தீர்மானத்தை ஆதரித்துத் தமிழவேள் உமாமகேஸ்வரன் பிள்ளையும், சிதம்பரம் என். தண்டபாணியும் முழக்கமிட்டனர். தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் யார் தெரியுமா? அவர்தான் பேரறிஞர் அண்ணா! அன்றைக்கு சி.என். அண்ணாதுரை எம்.ஏ.

**இந்தி ஆதிக்க எதிர்ப்புப் பிரச்சாரத்தில் அண்ணாதுரை என்ற ஒரு புதிய பெயர் தமிழ்நாட்டு மூலைமுடுக்கெல்லாம் எதிரொலிக்கத் தொடங்கியது.**

**"எப்படிப் பேசுகிறார் மனுஷன்!"**

**"சங்கீதம் கேட்பது போல் இருக்கிறதே."**

**"ஆட்ட பாட்டமில்லாமல் அசைவில்லாமல் மெல்லச் சுழன்று மேடையிலே தமிழ்ச் சொற்களை மாதுளை முத்துக்கள் போல் உதிர்க்கிறாரே!"**

**"என்ன உவமை! என்ன அழகு!"**

**"குள்ளமான உருவம்! கள்ளமில்லாப் பார்வை! மடை திறந்தாற் போல் பேச்சு."**

**"ஆணித்தரமான வாதங்கள். யாரும் மறுக்கவொண்ணாத புள்ளி விவரங்கள். அடடா! பேச்சா அது! குற்றாலத்து அருவி! கொஞ்சு தமிழ்ச் சிந்து!"**

இப்படியெல்லாம் அவர் பேச்சுக்குப் படித்தவர் மத்தியிலும், பாமரர் மத்தியிலும் பாராட்டுரைகள் குவிந்தன.

அண்ணாவின் வருகை, இந்த இயக்கத்திற்கும், குறிப்பாக இளைஞர்கள், மாணவர்கள் மத்தியிலும், எத்தகைய மாறுதலையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தியது என்பதை விவரிக்கவே இயலாது.

வாலிப வசந்தத்தை, தியாகப் பொது வாழ்வு எனும் கடுங்கோடையிலே வாட்டிக் கொண்டு, ஏழை எளிய மக்கள் வாழ்வில் வளம் குவிக்கப் பாடுபடும் தொடர் பணித் தொண்டராக அண்ணா அவர்கள், இளைஞர்களின் மத்தியில் எழுஞாயிறாகவும் வைகறை விடியலாகவும் தோன்றிய பிறகு, அவரது எழுத்து நடையும், மேடைப் பேச்சு நடையும் எல்லோரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டு, இயக்கத்திற்குப் புது பொலிவும் - புதிய வலிவும் வழங்கத் தொடங்கியது. அவரது ஆதாரபூர்வமான வாதங்களையும், அடுக்கடுக்காக அள்ளித் தரும் அசைத்திட முடியாத சான்றுகளையும் கண்டும், கேட்டும் படித்த இளைஞர்கள் மீண்டும் மீண்டும் அந்தப் பேச்சினைக் கேட்க, எழுத்தினைப் படிக்கத் துடித்து எழுந்தனர். இயக்கத்தின் பகுத்தறிவுப் பாதையிலே - இளைஞர் குழாம்! அரசியல் அரங்குகளிலே இளைஞர் எழுச்சி - வெகு விரைவில் "அண்ணா" என்ற சொல் தமிழர்களுக்கும், தரணி வாழ் அறிஞர்களுக்கெல்லாம் தாரக மந்திரமாயிற்று!

**பெரியாரின் தளகர்த்தராக - சுயமரியாதைச் சுடராக - திராவிட இயக்கத் தென்றலாக, புயலாக அனைவர் உள்ளத்தையும் கொள்ளை கொண்ட, தமிழர் உரிமைகள் காத்திட, மொழி காத்திட, அடக்குமுறை எதிர்த்து சிறைப்பட்ட அடலேறாக விளங்கிய அண்ணா அவர்கள், 1949ஆம் ஆண்டு வரையில்தான் திராவிடர் கழகத் தளபதியாக விளங்கினார். பின்னர் தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளரானார். திக்கெட்டும் தெளிவான அரசியல் உணர்வை தெளித்திட்ட அறிஞர் பெருந்தகை ஆனார் - அவர் வந்தார் - அண்ணா வராமல் இருந்திருந்தால், இந்த இயக்கத்தை இவ்வளவு ஒளி கப்பியிருக்குமா? என்ற வினாவுக்கு விடை அவ்வளவு எளிதில் கிடைக்கத்தானில்லை.**

**அன்புள்ள**

**மு.க.**

(முரசொலி - 12.11.2007)

---

### நீதிமன்றத்தில் வாதிடத் தேவை இருக்காது!

## விசாரணை அமைப்புகளின் தவறான செயல்பாடுகள்!

### ஒன்றிய முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கண்டனம்!



சென்னை, நவ. 27–

பா.ஜ.க. ஆட்சியில், சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகளின் தவறான செயல்பாடு வெளிப்படையாகவே உள்ளது என்றும், நீதிமன்றத்தில் வாதிடத் தேவை இருக்காது என்றும் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் சாடியுள்ளார்.

சட்டமன்றத் தேர்தல் நடைபெறும் ராஜஸ்தான் மற்றும் தெலுங்கானாவில் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு அமலாக்கத்துறை சம்மன் அனுப்பியுள்ளது.

இதுகுறித்து காங்கிரஸ் மூத்த தலைவரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான ப.சிதம்பரம், சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:–

தெலுங்கானா தேர்தலில் குறைந்தபட்சம் நான்கு காங்கிரஸ் வேட்பாளர்கள் அமலாக்கத்துறையால் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் பா.ஜ.க.வின் தேர்தல் அறிக்கைக் குழுவின் தலைவராக இருந்து நவம்பர் 1ஆம் தேதி பா.ஜ.க.வில் இருந்து விலகியவர் ஆவார். பா.ஜ.க.வின் எந்த வேட்பாளரும் விசாரணை அமைப்புகளால் தேடப்படவில்லை. பா.ஜ.க.வின் அனைத்து வேட்பாளர்களும் கடவுளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் மற்றும் தெய்வீக ஆசீர் வாதங்களைக் கொண்டவர்கள் என்பது வெளிப்படையானது.

பா.ஜ.க. ஆட்சியில், சி.பி.ஐ., அமலாக்கத்துறை போன்ற விசாரணை அமைப்புகளின் தவறான செயல்பாடு வெளிப்படையாகவே உள்ளது. நீதிமன்றத்தில் வாதிட தேவை இருக்காது.

இவ்வாறு ப.சிதம்பரம் சாடியுள்ளார்.

---

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு - தயாநிதி மாறன் எம்.பி. முன்னிலை! க.வினோத் தலைமை!

## சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் எ.வ.வேலு - நாஞ்சில் சம்பத் - சே.மெ.மதிவதனி புகழுரை!

*சென்னை, நவ. 27*

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (27.11.2023 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு, ஒய்.எம்.சி.ஏ. ட்வுட்டனில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் க.வினோத் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.சுதாகர், சொ.வேலு, டி.லோகேஷ், கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், புனிதவதி எத்திராசன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், கோ.மணி, புரசை ஜி.தாமோதரன், வே.உமாகாந்த், க.நந்தீஸ்வரன், அ.நிர்மலாதேவி, எல்.சுந்தர்ராஜன், ஆர்.டி.சங்கர்நானா, சே.பாலாஜி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி.ஜெ.பிரபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இப்பொதுக்கூட்டத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, நாஞ்சில் சம்பத், சே.மெ.மதிவதனி ஆகியோர் புகழுரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ப.தாயகம் கவி, இ.பரந்தாமன், அ.வெற்றிஅழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ்.இரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, சரிதா மகேஷ்குமார், பரிதி இளம் சுருதி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், கழக தோழர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

58 வது வட்டக் கழகச் செயலாளர் வி.விஜயகுமார், 58 (அ) வட்டக் கழகச் செயலாளர் ஆர்.பாபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

---

### அமைச்சர்கள் எஸ்.ரகுபதி - சிவ.வீ.மெய்யநாதன் தலைமை!

## மாவட்டப் பிரதிநிதி கேவிஎஸ்.ஏ.மோகன் - பச்சையம்மாள் இல்ல திருமண விழா!

### பெரியண்ணன் அரசு, எம்.எம்.அப்துல்லா வை.முத்துராஜா, கேபிகேடி.தங்கமணி, ரெ.தங்கம் பங்கேற்பு!



*புதுக்கோட்டை, நவ.27-*

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், திருவரங்குளம் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அரசடிப்பட்டி, தவளப்பள்ளம் கிராமத்தில் மாவட்டப் பிரதிநிதி கேவிஎஸ்.ஏ.மோகன்-பச்சையம்மாள் ஆகியோர் மகன் எம்.மகேஷ்வரனுக்கும் தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தாலுகா, கொண்டிகுளம் ரா.ராஜேந்திரன் - செல்லம்மாள் என்ற மாலா ஆகியோர் மகள் ஆர்.ராதிகாவுக்கும், அரசடிப்பட்டி மணமகன் இல்லத்தில் திருமணம் *29.11.2023* வியாழக்கிழமை காலை *10.30* மணி முதல் *11.30* மணிக்குள், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், சட்டத்துறை அமைச்சர் எஸ்.இரகுபதி, சுற்றுசூழல்,காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் ஆகியோர் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னாள் மாவட்டச் செயலாளர் பெரியண்ணன் அரசு, எம்.எம்.அப்துல்லா எம்.பி., டாக்டர் வை.முத்துராஜா எம்.எல்.ஏ., சிவகங்கை மாவட்ட துணைச் செயலாளர் ஜோன்ஸ் ரூசோ, தொழிலதிபர்கள் எஸ். ராமச்சந்திரன்,எஸ்.ஏ. சையது இப்ராஹிம், சொத்து பாதுகாப்புக் குழு உறுப்பினர் த.சந்திரசேகரன், மாநில இலக்கிய அணி துணைத் தலைவர் கவிச்சுடர் கவிதைப் பித்தன், தமிழ்நாடு அரசு நலவாரிய உறுப்பினர் ரெ.தங்கம், திருவரங்குளம் தெற்கு ஒன்றிய செயலாளர் அரு.வடிவேலு, மாவட்ட துணை செயலாளர் ஞான.இளங்கோவன், ஒன்றிய பெருந்தலைவர் கேபிகே.டி.வள்ளியம்மை தங்கமணி, நகர்மன்ற தலைவர் திலகவதி செந்தில், திருவரங்குளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் கே.எஸ்.ரவி, மணமேல்குடி ஒன்றியச் செயலாளர் சக்தி.ராமசாமி, அறந்தாங்கி கிழக்கு ஒன்றிய செயலாளர் எல்.குமார், பேரூராட்சி மன்ற தலைவர் கே.சி.சிவக்குமார், ஆலங்குடி பேரூர் செயலாளர் ஏ.பழனிகுமார், ஊராட்சி மன்ற தலைவர் ஆர்.நாராயணன், பேரூராட்சி தலைவர் ராசி முருகானந்தம், முகமை "இணைதாளம்" என்.ஜெயராமன், தமிழ்நாடு அரசு நலவாரிய உறுப்பினர் சகாய சங்கீதா, தலைமை ஆசிரியர் ஆரோக்கிய மேரி, அருட்சகோதரி ஏ.அடைக்கலமேரி ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவரங்குளம் மேற்கு ஒன்றிய செயலாளர் கே.பி.கே.டி.தங்கமணி வரவேற்று பேசுகிறார்.

மேலும், நிர்வாகிகளான ரீதேவி அண்ணாத்துரை, க.சத்தியமூர்த்தி, கேபிகே.பனையப்பன், செ.அசோக் பாண்டியன், ராஜு ரஞ்சன் பிரதர்ஸ், ஆர்.ரெத்தினவேல், த.மணிராஜன், தமிழ் செல்வி முருகேசன், க.நைனா முகமது,சிவ.பால.இளங்கோ, எம்ஜி என்ற ராமச்சந்திரன், மு.கருணாகரன், பொன்.லோகநாதன், சர்வேயர் எம்.நடேசன், வழக்கறிஞர் டி.வளர்மதி, கே.பி.கே.டி.தேவசூர்யா, ஆர்.வைத்திலிங்கம், எம்.எம்.பாலு, ஆசிரியர் எம்.ரமேஷ், அரசு கூடுதல் வழக்கறிஞர் கன்ரா கணேஷ், அரசு கூடுதல் வழக்கறிஞர் த.பழனியப்பன், எஸ்எம்.குமரேசன், டாக்டர் ஆர்.கண்ணதாசன், அரசு கூடுதல் வழக்கறிஞர் த.கண்ணதாசன், டி.ஜான்பிரிட்டோ, உமா சண்முக சுந்தரம், க.செல்லத்துரை, சி.சிவசங்கர், கேஎம்.சுப்பிரமணியன், பெரி.பன்னீர்செல்வம், சுமதிமெய்யநாதன், கேவி.சுப்பையா, எஸ்.செல்வம், க.தெட்சிணாமூர்த்தி, ஆர்.மகிமைநாதன், ஆர்.எம்.ஏ.அயூப்கான், உஷாசெல்வம், ஏ.அருளானந்து, ஆர்.நாராயணசாமி, ஐ.லூர்துநாதன், நேஷனல் என்.அப்துல்லா, ஏஎஸ்ஆர்.இப்ராஹிம், எஸ்பி.முத்துராமன், கே.வீரப்பன், வீர.மெய்யர், எஸ்விடி.செங்கோல், எல்.கணேசன், எம்எஸ்கே.சின்னராஜா, என்.சங்கர், கே.சந்திரசேகர், டி.பாபுஜான், ஒய்.அருண்ஜார்ஜ், இராம.தமிழரசன் ஆகியோர் பங்கேற்று வாழ்த்துரை வழங்குகின்றனர்.

தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம் நன்றி தெரிவித்து பேசுகிறார்.

வரவேற்பு குழு: ஆர்.எஸ்.ராஜ சரவணன், ஏ.கே.செல்வம், ஏ.முகமது ரபீக், ராஜ சரவணன், கே.பழனியப்பன், கேவி.சண்முகசுந்தரம், எல்பிஎப்.கே.பரமசிவம், வீர.பாலாஜி, ஆர்.பாலமுருகன், கே.பிரசாத் மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகளும், ஒன்றிய கழக, பேரூர் கழக மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளும், கழக அனைத்து சார்பு அணி நிர்வாகிகளும், கழக முன்னோடிகளும், குழந்தை விநாயகர்கோட்டை ஊராட்சி பொதுமக்களும், நண்பர்களும் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

---

## சிங்கம்புணரி - எஸ்.புதூரில் ரூ. 2.69 கோடியில் புதிய கட்டிடப்பணிகள்!

### அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கி வைத்தார்!

*சிவகங்கை, நவ. 27 -*

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி சிங்கம் புணரியில் புதிய பேரூராட்சிஅலுவலக கட்டிடம் ரூபாய் 1கோடி மதிப்பீட்டிலும், எஸ்.புதூர் பாரிவள்ளல் ஒன்றியம் புழுதிப்பட்டியில் அரசு மேல்நிலைப்பள்ளியில் 8 கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் ரூபாய் 1 கோடியே 69 லட்சத்திலும் ஆக மொத்த ரூபாய் 2 கோடியே 69 லட்சத்தில் பணிகள் நடைபெற உள்ளது.புதிய கட்டிடப் பணிகள் துவக்க விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷாஅஜித் தலைமையில் நடைபெற்றது. கூட்டுறவுத் துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் திட்டப்பணிகளை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் தேவகோட்டை கோட்டாட்சியர் எஸ்.பால்துரை மாவட்ட ஊராட்சி மன்ற தலைவர் பொன்மணி பாஸ்கரன், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் செந்தில் குமார், வட்டாட்சியர் சாந்தி, பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, துணை தலைவர் செந்தில் குமார், செயல் அலுவலர் சண்முகம், ஒன்றிய செயலாளர்கள் பூமணி, கே.பாலசுப்பிரமணியன், பி.செல்வராஜ், பேரூர் கழக செயலாளர் கதிர்வேலு, நிர்வாகிகள் சிவபுரி சேகர், புகழேந்தி, மனோகரன், குடோன்மணி, ஒன்றிய துணை செயலாளர் முத்துக்குமார் மற்றும் பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள் உட்பட தலைமையாசிரியர், ஆசிரியர்கள், பள்ளி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டார்கள்.